**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 27 ம் நாள்
**இ.ம.எண். 2/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 232/2019**

1. சின்னதுரை
2. பஞ்சமூர்த்தி
3. மோகனசுந்தரம் ..மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

//எதிர்//

செல்வேந்திரன் ..எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 26.09.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. R. ரம்யா, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. E. செல்வராஜ், அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு நன்கு பரிசீலித்தபின் இன்று (13.10.2025) இந்நீதிமன்றம்கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது கடந்த 12.08.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கரவு செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. இந்த மனுவின் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர் தாவா சொத்துக்குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்ததாகவும், மேற்படி வழக்கின் வாய்தா கடந்த 05.08.2024 அன்று தனது தரப்பில் வாதி தரப்பு சாட்சி 1–யை குறுக்கு விசாரணை செய்யாததால் தன் மீது எக்ஸ்பார்ட்டி உத்தரவாகி கடந்த 12.08.2024 அன்று மேற்படி வழக்கு Exparty Decree செய்யப்பட்டதாகவும், மேற்படி வழக்கு விசாரணைக்கு

வந்தபோது தனக்கு உடல்நிலை சரியில்லாமல் கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும், அதனால் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும், தான் வேண்டுமென்றோ அல்லது கவனக்குறைவாகவோ ஏற்பட்டதல்ல என்றும், இம்மனு நிராகரிக்கப்பட்டால் தனக்கு கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே, கடந்த 12.08.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கரவு செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்துள்ளார் .

**<u>எதிருரையின் சுருக்கம்:</u>**

3. இம்மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தாவா வழக்கில் சென்ற 05.08.2024 அன்று மனுதாரரர்கள் தரப்பில் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாததால் தாவா வழக்கு 12.08.2024 அன்று மனுதாரர்களுக்கு எதிராக Ex party தீர்ப்பாகியுள்ளது உண்மை என்றும், ஆனால் PW1 விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய வாய்தா 04.07.2024, 15.07.2024, 05.08.2024 ஆகிய தேதிகளில் போதிய வாய்தா கொடுக்கப்பட்டு மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர்களோ அல்லது அவரது வழக்கறிஞரோ ஆஜர் ஆகாததால் Ex party தீர்ப்பாகியுள்ள விவரம் மனுதாரர்களுக்கு நன்கு தெரியும் என்றும், மனுதாரர் வேண்டுமென்றே தங்களுக்கு மேற்படி வழக்கில் நல்ல கட்சி இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டு குறிப்பிட்ட காலத்தில் மேற்படி Ex party decree யை மாற்ற மனு தாக்கல் செய்யாமல் மேற்படி காலதாமத மனுவை 319 நாட்கள் காலதாமதத்துடன் மனு தாக்கல் செய்துள்ளதால் இம்மனு தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது என்றும், மனுதாரர் காலதாமத மனுவில் பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லை என்றும், கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும் அதனால் தங்கள் வழக்கறிஞரை தொடர்பு கொள்ள இயலவில்லை என்று கூறுவதற்கு மனுவுடன் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும், இந்த மனுதாரர்கள் இந்த எதிர்மனுதாரர் மீது வேண்டுமென்றே பூம்புகார் காவல்நிலையத்தில் பொய்யான புகார் கொடுத்து மேற்படி புகாரின் அடிப்படையில் இந்த எதிர்மனுதாரர் மீதும் அவருடைய மனைவி மீதும் பூம்புகார் காவல் நிலையத்தில் u/s 294(b), 506 Part II-ல் FIR No 36/2017 வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வழக்கு சமூகம் நீதிமன்றத்தில் CC No. 213/2019 ஆக விசாரணைக்கு எடுக்கப்பட்டு அந்த

வழக்கில் 13.11.2024 ல் PW1 ஆக விசாரிக்கப்பட்ட இந்த முதல் மனுதாரர் பஞ்சமூர்த்தி தனக்கு தாவா வழக்கு எதிர்மனுதாரரர் சாதகமான விவரம் தனக்கு நன்கு தெரியும் என்றும், மேற்படி CC 213/2019 தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு மனுதாரர்கள் மேற்படி இந்த மனுவை காலதாமதமாக எவ்வித ஆவணங்களும் இன்றி தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை இந்த மனுவை அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**தீர்வு:**

5. மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா வழக்கின் வாய்தா கடந்த 05.08.2024 அன்று மனுதாரர் தரப்பில் வா.சா. 1 குறுக்கு விசாரணை செய்யாததால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி வழக்கு விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், எனவே, கடந்த 12.08.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கரவு செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் வேண்டுமென்றே தங்களுக்கு மேற்படி வழக்கில் நல்ல கட்சி இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டு குறிப்பிட்ட காலத்தில் மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவை மாற்ற மனு தாக்கல் செய்யாமல் காலதாமதமாக எவ்வித ஆவணங்களும் இன்றி தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர் இந்த அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். கடந்த 12.08.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கரவு செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரியுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில், குறிப்பிட்ட காலத்தில் மேற்படி ஒருதலைப்பட்ச

உத்தரவை மாற்ற மனு தாக்கல் செய்யாமல் காலதாமதமாக எவ்வித ஆவணங்களும் இன்றி தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கூறியுள்ள காரணம் ஏற்றுக்கொள்ளகூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும், மனுதாரர் தனது தரப்பு வழக்கை எடுத்துக்கூறுவதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுவை அனுமதிக்கலாம் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 13.10.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2025.10.13 14:33:13 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**தரங்கம்பாடி.**

**<u>இணைப்பு:</u>**

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :இல்லை

KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2025.10.13 14:33:18 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**தரங்கம்பாடி.**